
# நவரத்தினசாமி



## நீச்சு வீரன்

## வாழ்க்கைச் சித்திரம்

# நீச்சு வீரன்
# வாழ்க்கைச் சித்திரம்

*ஆசிரியர்:*
**காவலூர் கவிஞர் ஜி. எம். செல்வராஜ்**

*புதிப்பாளர்:*
**ரி. லேயோன்பிள்ளை**
*575, புளூமண்டோல் றோட், கொழும்பு.*

*விலை: 30 சதம்*

| | |
|---|---|
| நூலின் பெயர்: | நீச்சு வீரன் வாழ்க்கைச் சித்திரம். |
| ஆசிரியர் பெயர்: | காவலூர் ஜி. எம். செல்வராஜ் |
| புதிப்பாளர்: | ரி. லேயோன்பிள்ளை |
| முதற்பதிப்பு: | 21 - 4 - 54 |
| இரண்டாம் பதிப்பு: | 18 - 4 - 2009 |
| கணனிப்பொறி அச்சமைப்பு: | உமா. நகுலசிகாமணி |
| அட்டைவடிவமைப்பு: | ந. நவஜீவன் |
| மீள் பதிப்பு: | வல்வை வரலாற்று ஆவணக் காப்பகம் கனடா |

Valvai Historical Document
Conservation Centre,
Canada.
www.vvthistory.com

# முகவுரை

நம் தாய்நாட்டிற்குத் தனிப்பெரும் பெருமையை ஈட்டிக்கொடுத்த நீச்சு வீரர் திரு. மு. நவரத்தினசாமி அவர்களை நாம் எவ்வெவ்விதத்தில் கௌரவித்துப் பெருமை பாராட்ட முடியுமோ அவ்வவ்விதத்தில் கௌரவிப்பது நம் எல்லோருக்கும் சுமந்த பெருங் கடமையாகும்.

இக்கடமைகளில் இவரது சீவிய வரலாற்றை ஒரு சிறு புத்தக ரூபமாக்குவதும் ஒன்றெனக் கருதியே இச் சிறுநூலை எழுதி வெளியிடலானோம்.

இச் சிறுநூலை எழுதுவதற்கு ஊக்கமளித்த தமிழபிமானி திரு. எம். ஜாக்கப் அவர்களுக்கும், இச் சரித்திரக் குறிப்புகளைத் திரட்டித்தந்த வல்வெட்டித் துறை திரு. ரி. சபாரெத்தினம், கே. றங்கவடிவேல், கே. இராமநாதன் அவர்களுக்கும் இதனைச் சிறந்த முறையில் சிரமம் பார்க்காது சீக்கிரம் வெளியிடக் கூடிய உதவிபுரிந்த விவேகா அச்சகத்தாருக்கும் எம் ஆழ்ந்த நன்றி உரித்தாகுக.

இச் சிறுநூலை ஒவ்வொரு தமிழரும் வாங்கிப் படித்து நமது தமிழ்ச் சிறார்களை நீச்சு வீரர் நவரத்தினசாமியைப் போன்ற வீரப் பண்பில் வளர்ப்பிக்க வழிதேடுவதே இந்நூலை வெளியிட்டதனால் அடையும் பெரும் பயனாம்.

21. 4. 54

ஆசிரியர்.
ஜி. எம். செல்வராஜ்.

# மீள் பதிப்புரை

தொண்டமானாறு என்னும் சரித்திரப் பிரசித்தி பெற்ற ஊரில் பிறந்த திரு. முருகுப்பிள்ளை நவரத்தினசாமி அவர்கள் வல்வெட்டித்துறை ரேகு துறைமுகத்திலிருந்து தாய்த் தமிழகத்தின் கோடிக் கரைக்கு முதன் முதலாக 1954ஆம் ஆண்டு நீந்திக் கடந்து ஈழத் தமிழனின் சாதனையை உலகறியச் செய்தார். நீந்த ஆரம்பிக்கும் முன்பும், நீந்திய பின்பும் வல்வை ரேகு கடற்கரையில் நடந்த வீர வரவேற்பின் போதும், யாழ்ப்பாண மக்கள் லட்சக்கணக்கில் கூடியதாக அன்று வெளிவந்த *தினகரன்* பத்திரிகை மூலம் அறிய முடிகிறது.

இன்று வல்வெட்டித்துறை நகரசபையில் தொண்டமானாறு இடம் பெறுவதோடு, மேற்குக் காவலனாக செல்வச் சந்நிதி வேலனும் அருள் பாலிக்கின்றார். இருபதாம் நூற்றாண்டிலே தமிழன் பெருமையை உலகிலே நிலை நாட்டிய தொண்டமானாறு பெற்ற நவரத்தினசாமி அவர்களின் வரலாற்றை, 21. 4. 1954இல் காவலூர் கவிஞர் ஜி. எம். செல்வராஜ் ஆசிரியர் அவர்கள் எழுதி, திரு. ரி. லேயோன் பிள்ளை அவர்கள் நூலாக வெளியிட்டார். இந்த வீர வரலாற்று நூலை எரிந்த யாழ் நூல்நிலையத்திற்கும், வரலாற்று ஆய்வாளர்களுக்கும் மீள்பதிப்புச் செய்வதில் வல்வை வரலாற்று ஆவணக் காப்பகம் தனது சுவடுகளைப் பதிக்கின்றது.

இந்நூலில் எமது காப்பகத்தில் உள்ள புகைப்படங்களும் மற்றும் அதனோடு இணைந்த ஆவணங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

நன்றி

18-04-2009

ந. நகுலசிகாமணி
வல்வை வரலாற்று ஆவணக் காப்பகம்
கனடா.

# பிறப்பு

இவ்விருபதாம் நூற்றாண்டில் தமிழன் பெருமையை உலகிலே நிலை நாட்டிய நீச்சல் வீரர் நவரத்தினசாமி அவர்கள் இலங்கா துவீபத்திலே யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்பாகத்திலே, தொண்டமானாறென்னும் ஊரிலே பல்லோராலும் நன்கு மதிக்கப்பெற்ற சைவப்பெரியார் உயர் திரு. முருகுப் பிள்ளை என்பவரின் செல்வப் புத்திரனாய் 1909ம் ஆண்டு ஆவணி மாதம் 16ந் திகதி ஜனனமானார்.

இவரைப் பெற்றோர்கள் சீராய்ச் சிறப்பாய், செல்லமாய் வளர்த்துப் பாலப்பருவங் கடந்து பள்ளிப் பருவ மெய்தியதும், அரிச்சுவடி முதலாம் ஆரம்பக் கல்வியை தொண்டமானாற்றிலும், மேல் படிப்புகளை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் பயிற்றுவிக்கலானார்கள்.

வாழும் பிள்ளையை மண் விளையாட்டிலும் விளையும் பயிரை முளையிலும் தெரியும் என்ற பழமொழிகளுக்கொப்ப இவரது கூரியமதியும் வீரிய திறனும் நேசிய சிந்தையும் மாணவானயிருக்கும் பொழுதே நன்கு விளங்கியது.

கல்வி பயிலும் காலத்திலேயே, முன்னெவராலும் கடந்திராத ஆங்கிலக் கால்வாயை ஓர் வெள்ளைக்கார வீரன் நீந்திக் கடந்த அதிசய செயலை வகுப்பாசிரியர் மூலம் அறிந்தார். இதனை அறிந்த

தும், தானும் தம் பக்கத்திலிருக்கும் பாக்கு நீரிணையை எதுவிதமும் ஓர் நாள் நீந்திக் கடந்து முடிக்கவேண்டுமென்று நினைந்து இவ்வாசையை தன் நெஞ்சில் ஆழப்பதிய வைத்தார். அன்றிருந்தே நீச்சலை ஆரம்பித்து தனது நாளாந்த பணிகளொழிந்த ஏனைய நேரங்களிலெல்லாம் எவ்வித சோம்பலும் சோர்வும் இன்றி நீந்திப் பழகலானார். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார், என்னும் முதுமொழியையும் தெய்வத்தாலாகா தெனினும் முயற்சிதன் மெய்வருந்தக் கூலிதரும் என்னும் திருவள்ளுவர் வாக்கையும் தம் மனதில் பதிய வைத்து நாற்பத்தி நான்கு வயது நிரம்பப் பெற்றவராயிருந்தும் வீரமுறுக்கேறிய வாலிபனைப் போன்று காலையிலும் மாலையிலும் கடலிலே காலத்தைக் கடத்திப் பயிற்சி செய்தார்.

## குடும்ப சீவியம்

நீச்சல் வீரர் நவரத்தினசாமி 19ம் பிராயத்தில் தனது பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு அரசாங்க கிருஷிக இலாகாவில் சேர்ந்து கடமையாற்றலானார். அங்கு பணியாற்றும்போது தன் கூரிய மதியைக் கொண்டு கிருஷிக பாவனைக்கு வேண்டிய விதை தூவும் இயந்திரம் போன்ற பல இயந்திரங் களை நவீன முறையில் அமைக்கக் கூடிய மாதிரிப் பிரதிகளை அமைத்து அரசாங்கத்தாரிடம் சமர்ப் பித்து அங்கீகாரம் பெற்று கிருஷிக இலாகாவுக்குத் தனிப்பெரும் புகழை ஈட்டிக்கொடுத்தார்.

இவரது அயரா உழைப்பையும், விடா முயற்சியையும், புத்திக்கூர்மையையும், விவேகத்தையும் அறிந்த கிருஷிக இலாகா மேலதிகாரிகள் இவரை கிருஷிகப் பகுதி போதகாசிரியராக நியமிக்கலானார்கள். இன்னும் அவ்வுத்தியோகத்தில் இருந்தே பணியாற்றி வருகின் றார்.

நம் வீரனின் ஆண்மையையும் ஆற்றலையும், வீர தீரச்செயல்களையும் சிந்திக்கும் பொழுது குஸ்தி மல்லர்களைப் போன்ற தோற்றமும், பலமும், எடையும் அமைந்திருக்குமென்று நாம் ஊகிக்கலாம். ஆனால் அஃதப்படியன்று. மட்டமான கட்டு மஸ்தான தேகம். வீரஞ்செறிந்த தோற்றம், எதற்கும் அஞ்சாத சிங்கநடை, புன்னகை பூத்த முகம், அமைதியான பேச்சு, அன்பொழுகும் பார்வை. உயரம் 5 அடி 7 அங்குலம், எடை 140இறாத்தல் இதுவே நம் நவயுக மாருதியின் தேக அமைப்பு.

இவ்வீர புருஷனின் தேக அமைப்பு சாதாரண மக்களைப் போன்று அமைந்திருப்பினும் மனோ வலிமையிலும், கொண்ட கருமத்தை சளையாது சாதிக்கும் ஆற்றலிலும் இன்றைய உலகத்திலே இவருக்கிணை இவரேயன்றி வேறு வீரபுருஷன் இல்லையென்றே கூறிவிடலாம். இதனை மெய்ப்பிக்க இன்றிவர் காட்டிய வீரப்பணியே போதிய சான்றாகும்.

உத்தியோகத்தில் அமர்ந்து படிப்படியாக உயர்வு பெற்ற பின் இல்லறமென்னும் நல்லறத்தில் ஈடுபடலானார். பத்தாவுக்கேற்ற பதிவிரதையுண்டா

னால் எத்தாலும் கூடிவாழலாம் என்பதற்கிணங்க தன் குணத்திற்கும், லட்சியத் திற்கும் ஒருங்கமையப் பெற்ற லீலாவதி அம்மையாரை தன்னில்லக் கிழத்தியாகத் தெரிந்தெடுக்கலானார். இவ் வம்மை யாரும் பத்தாவுக்கேற்ற பத்தினியாய் பதிவிரதை யாயமைந்து, கருணையும் அன்பும், கலந்துருப் பெற்று இல்வாழ்க்கை நடத்தலானாள். இதன்பய னாக இவர்களுக்கு மூன்று புத்திரர்கள் தோன்றலா னார்கள்.

மலை சரிந்தாலும் மனம் சளையாத மாவீரன் நவரத்தினசமியின் மனம் சோர்வடையக் கூடியதோர் சோக சம்பவம் இவரது இல்வாழ்க் கையில் எதிர்பாராத விதமாகக் குறுக்கிடலாயிற்று. அன்புடன் நேசித்துவந்த அருமைப்பத்தினி நோய்வாய்ப்பட்டு பத்தாவும் புத்திரரும் ஏங்கித் தவிக்க சிவபதம் செல்லலானாள்.

மங்காமாணிக்கத்தை மாதர்திலகத்தை மனதிற் குகந்த மனையாளைப் பிரிந்ததால் சாகரக்குமரனின் மனம் சஞ்சலத்திலாழ்ந்தது. இடைவிடாது இரவும் பகலும் இதேதுயரம் இவரைவாட்டியது. இன்றும் தம்மனைவி யைப் பற்றி நினைத்து விட்டால் அல்லது பிறர் அவளின் நற்குணத்தைப் பேசி நினைப் பூட்டினால் தங்கொணாத் துய்ரால் சோர்வுறுகிறார். இதனாலேயே இவரைப் பேட்டி காணச்செல்லும் பத்திரிகை நிருபர்களுக்கு அயலிலுள்ளவர்கள் மனைவியைப் பற்றி ஒன்றும் பேசிவிடாதீர்கள் என்று வற்புறுத்திக் கூறிவிடுவார்கள். இவர்

மனைவிமேல் கொண்டுள்ள பற்றுதலை விளக்கப் பல உதாரணங்கள் தேவையில்லை. ஒரு சில உதாரணமே போதுமானது. முதலாவது மனைவியினிறந்த சடலத்தை நீராட்டுவதற்குத் தம் இனசனர் எவரையும் அழையாது தம்பிள்ளைகளைக் கொண்டே தண்ணீர் அள்ளி தாம்தானே நீராட்டி முடித்திருக்கிறார். இரண்டாவது பிரேதத்தைத் தகனம்பண்ண சுடலைக்குச் சென்ற பொழுது, அங்குவைத்து தன்கரத்தை கத்தியால் கிழித்து ரத்தத்தை நிலத்திலே சிந்தவிட்டு, மறுதாரம் இனிமேல் மணக்கமாட்டேனென்று தன் குருதியின் மேல் ஆணையிட்டிருக்கிறார். மூன்றாவது இன்றைக்கும் தன் மனைவியைப் பத்தினித் தெய்வமாக மதித்து அவளின் பிரதிமைப் படத்தைத் தன்னறையிலே தொங்க விட்டு ஒவ்வொரு நாளும் தீபமேற்றி மலர்சாற்றி பூஜித்து வருகிறார். இதனால் இவர் மனைவிமேல் வைத்த அன்பும் அபிமானமும் பிரத்தியட்சமாய் விளங்கு கின்றது.

## நீச்சல் ஆரம்பம்

தமிழன்னையின் தவப்புதல்வன், ஈழநாட்டுச் சிங்கம் சாகரக்குமரன், நவயுகமாருதி திரு.நவரத்தினசாமி அவர்கள் 31.5 மைல் நீளமுள்ள பாக்கு நீரிணையை நீந்திக், கடப்பதற்காக 1954ம் ஆண்டு பங்குனிமாதம் 16ந் திகதி முதன்முறையாக ஆழியில் குதிக்கலானார். இவ்வீர தீரச்செயலை, ஒப்பற்ற சாதனையைப் பார்ப்பதற்கும், வீர மகனை ஆசிர்வதித்து வழியனுப்புவதற்கும் நானாதிக்கிலுமிருந்

தும் மக்கள் கும்பல் கும்பலாக வல் வெட்டித்துறை முகத்தில் வந்து குவியலானார்கள். எல்லோர் நாட்டமும் இவ்வீரனிலும் இவரது வீரச் செயலிலுமே லயித்திருந்தன. தாயுள்ளம் படைத்த தமிழ் மக்கள் தங்களின் வீரமகன் வெற்றி விருதுடன் வீடு திரும்ப வேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்தனர்.

அன்று பிற்பகல் 2மணிக்கு இவரது மூன்று புதல்வர்களும், இனசனர்களும், நண்பர்களும் புடைசூழ பாக்கு நீரிணைப் பயணத்தை ஆரம்பிப் பதற்கு புன்னகை பூத்த முகத்துடனும், பூரிப்புடனும் சிங்கநடை போட்டு சிந்துக்கரை வந்து சேர்ந்தார். கரையில் அவரின் வீரவடிவம் கண்டதும் அங்கு குழுமியிருந்த அந்தக்கும்பல் கரகோசமிட்டு ஆர வாரஞ் செய்து தமது உளத்தூய்மையை அன்பின் பெருக்கை பிரத்தியேகமாய்க் காட்டினர்.

பின் நமது வீரமகன் த்மது மூன்று புத்திரர் களையும் மார்புறத்தழுவி முத்தமிட்டு பிரியாவிடை கூற, முதியோர் ஆசியியம்ப, மக்கள் அரஹரா செபிக்க இலங்கைப் பிரதமரின் பிரதிநிதியாக சமுகம் கொடுத்திருந்த திரு. வி. நல்லையா எம்.பி அவர்கள் வழியனுப்பி வைக்க பிற்பகல் சரியாக 2.30 மணிக்கு நவயுகமாருதி நவரத்தினசாமி தமது வீரப்பாதம் ஆழியில் தோய்த்து நீச்சலை ஆரம்பிக்க லானார்.

செந்தமிழ் மைந்தன் சிந்தாயாத்திரை சென்ற தும் பாதுகாப்புக்காக வைத்தியசுகாதார அதிகாரி யும், போலிஸ் பகுதியினரும், மற்றும் இனசனரும்

இரு மோட்டார் படகுகளிலும், கட்டுமரத்திலும் ஏறிக் கொண்டு பின் தொடர்ந் தனர். நீச்சலை ஆரம்பித்து சொற்பதூரம் சென்றதும் கரையோரத்தில் கண் ணிமை கொட்டாமல் பார்த்துக் கொண்டு நின்ற ஜனக்கும்பலுக்கு போய் வருகிறேன் என்று கூறும் பாவனையாககைகாட்டி அவர்களிடம் விடைபெற் றுக் கொண்டார்.

நீச்சலை ஆரம்பித்த நேரமிருந்து எவ்வித களைப்பும் சோர்வும்மின்றி, சாகரத்தை யூடறுத்து நவயுக மாருதி நீந்தினார், நீந்தினார், நீந்திக் கொண்டே போனார். குறிக்கப்பட்ட இலக்கை அதா வது கோடிக் கரையை அடைவதற்கு இன்னும் ஏழு மைல் தூரமே உள்ளது. அந்நேரம் சாகரம் வாய் திறந்தது, மாருதம் சீறி எழுந்தது. அலை மலை போல் கிழம்பியது, மழை சோவெனப்பொழிந்தது. இயற் கையும் தமிழ்மகனின் வீரத்தை விவேகத்தை வெற்றிப் பிரதாபத்தைக் கண்டு வெட்கிநாணிய தோடல்லாமல் வஞ்சக நெஞ்சங்கொண்டு வலியப் போருக்கு இழுத்தது.

இயற்கையை எதிர்த்துயாரால் போரிட முடியும்? இயந்திர சாதனங்களாலியங்கும் மோட்டார் படகுகளே கடலில் எழும்பிய கொந்த ளிப்பை சமாளித்து திரை கிழித்து முன்னேறிச் செல்லமுடியாது தத்தளித்த தென்றால் சாதாரண மானிடப்பிறவி அதிலும் அரைக் கிழப்பருவத்தை அண்டி நிற்பவர், அக்கத்துணை பக்கத்துணையின்றி ஆள்துணை தோ,ள்துணையின்றி ஆழியின் மத்தி

யிலே, அலைகளின் நடுவிலே, காற்றினிடையிலே, மழையின் துளியிலே, மின்னலின் வீச்சிலே, இடியின் முழக்கத்திலே தனித்து நீந்திச்சென்று கரைசேருவதானால் அஃது சாதாரண வல்லமையன்று.

எனினும் முன்னறிவித்தலின்றி இயற்கை அனுப்பிய போர்ப்பத்திரத்திற்கு நமது மறத்தமிழன் அஞ்சி ஒஞ்சிப் பின்வாங்காது புறமுதுகு காட்டாது ஆழிகிழித்த கரத்தை சோரவிடாது நீந்திய காலை நிலமூன்றாது சபாஷ் எனச்சவால் விடுத்து கையடித்துப் போர்தொடுத்தனன். இவரது அஞ்சாமையையும் நெஞ்சுத்துணிவையும் தன்க்குத் தலை வணங்காது தன்னை எதிர்த்து போர் பொருத வந்த வீராண்மையையும் கண்ட இயற்கை அரக்கன் எதுவிதமும் இப் போரிலே இவரைத் தோற்கடிக்க வேண்டுமென நினைப்புக் கொண்டு தனது சகல வல்லமையையும் காட்டி வீரசிங்கனை எதிர்த்தது. அங்ஙனம் எதிர்த்தும் அஞ்சாத நெஞ்சுடைய நம் மாருதி இயற்கையை சற்றேனும் கெஞ்சாது முன்னேறிச் சென்றார். குறிக்கப்பட்ட கோடிக்கரை கோட்டையை மறத்தமிழன் கைப்பற்றிக் கொடி நாட்ட ஆகக் கூடியது ஏழு மைல்களே இருந்தன. இதனை இயற்கை அறிந்ததும் வந்தது மோசமென எண்ணி தனது கடைசி ஆயுதமாகிய நீரோட்ட மென்னும் நீடிய மதிலை நீலத் திரைக் கடல்நடுவே நிலைநாட்டியது. இதனால் நமது வீரன் முன்னேறிச் சென்ற தூரத்திலிருந்து பல மைல் பின்னாடி வரவேண்டியதாயிற்று. இவ்வியற்கை கொடுத்த பெரும் போரி

னாலும் எதிர்ப்பினாலும் நமது நீச்சல் நிபுணன் தமது நீச்சலை நிறுத்திக் கட்டுமரம் ஏறலானார். ஆயினும் ஆழியில் பாதமிட்டு நீச்சல் ஆரம்பித்த அன்று துவக்கம் நீச்சலைக் கைவிட்ட நேரம் வரைக்கும் 23.30 மணித்தி யாலம் அலைகடலில் மிதந்து நீரோட்டம் அள்ளிக் கொண்டு போனதூரம் வரைக்கும் உண்மைக் கணக்கின்படி 35 மைல் வரை நீந்திக் கடந்துள்ளார். எனவே முதல் தடவையிலேயே முன்னிருந்த உலக ரெக்கார்ட்டை உடைத்தெறிந்த வீரரென குறிப்பிடுதல் உண்மையிலேயே பொருத்த மானதாகும்.

## கோடிக் கரையில் கொடி நாட்டல்

பாக்கு நீரிணையைக் கடந்தே தீருவேன் அன்றேல் என் பிள்ளைகளில் ஒருவன் நிச்சயம் கடப்பான். இவ்விதம் 1954ம் ஆண்டு பங்குனி மாதம் 16ந் திகதி பாக்கு நீரிணையைக் கடக்க முதல் தடவையாக ஆழியில் குதித்து இயற்கைக் கோளாறி னால் முன்னேறிச் செல்லமுடியாது கரை சேர்ந்த நமது வீரன் நவரத்தினசாமி அவர்களால் கூறப்பட்ட பொய்யா மொழியாகும்.

தான் கூறிய வாக்கை நிறைவேற்ற வேண்டு மென்றும், முன்வைத்தகாலை பின்வைக்க மாட்டான் தமிழன் என்ற நற்பெயரை நிலைநாட்ட வேண்டு மென்றும், மங்கியிருந்த மறத்தமிழனின் நாமம் திரும்பவும் இவ்விருபதாம் நூற்றாண்டிலே பொங்கி யெழ வேண்டுமென்றும் தணியா வாசை கொண்டு,

1954ம் ஆண்டு பங்குனி மாதம் 25ம் திகதி வியாழக் கிழமை பிற்பகல் 4.10 மணிக்கு மீண்டும் கடலில் குதிக்கலானார்.

இவரது முதல் முறை நீச்சலில் கூடியிருந்த ஜனக் கும்பலிலும், இம்முறை அதிகம் கூடலாயிற்று மக்களிட்ட அரஹரா கோசம் வானைப் பிழந்தது. தாய்நாட்டினதும், தமிழினதும் தனிப்பெரும் புகழைத் தரணியில் எங்கும் நிலை நாட்ட அஞ்சா நெஞ்சனாய் ஆழியிலிறங்கிய தமிழ் வீரன் நவரத் தினசாமியை, யாழ்ப்பாணம் அசைஸ் கமிஷினர் திரு. ஸி. பார்குமாரகுலசிங்கம் பருத்தித்துறை பாராளுமன்றப்பிரிதிநிதி திரு. ரி. இராமலிங்கம் முதலான் பெருமக்கள் உற்சாக மூட்டி நல்லாசிகூறி வழியனுப்பி வைத்தனர்.

நீச்சலை நமது வீரமகன் ஆரம்பித்ததும் கரை யோரத்தில் கூடியிருந்த ஜனக்கும்பல் மீண்டும் அரஹரா கோஷமிட்டு ஆர்ப்பரித்தனர். மூன்று மோட்டார்ப் படகுகள் கம்பத்தின் உச்சியில் நம்தாய் நாட்டின் மணிக்கொடியைக் கம்பீரமாகப் பறக்க விட்டுப் பின் தொடர்ந்தன. ஆழியில் தோய்ந்த நம் வீரனின் பொற்பாதமும் பூசிதகரமும் அலைகளைக் கிழிக்க ஆரம்பித்தன. வெற்றியைக் காண வீரமேனி விரைந்து சென்றது. இவரது வீரத்தையும் இம்முறை கண்ட இயற்கை ஏக்கங் கொண்டது. இனிமேல் இவ்வீரனை கலியுக மாருதியை சமுத்திரமைந் தனை எவ்விதத்திலும் தோற்கடிக்க முடியாதென நினைந்து தனது அபாய ஆயுதங்களைக் கீழே

வைத்துவிட்டு புறமுதுகுகாட்டி ஓடியது. இயற்கையின் புறமுதுகை இலக்காக வைத்து நமது வீரன் விரைந்து விரைந்து நீந்திக்கொண்டே போனான். இலங்கை மாதா தன் மைந்தனின் நீச்சலை இமை கொட்டாது பார்த்துக் கொண்டிருந்தாள். தமிழ்த்தாய் வெள்ளக் கமலத்தில் வீற்றிருந்து உள்ளம் மகிழ்ந்தாள். பாரதமாதா தனது உடன் பிறந்த தங்கை மகனை வரவேற்க புன்னகை பூத்த முகத்துடனும் புதுமலருடனும் கோடிக் கரையை அண்டி வந்தாள்.

நீச்சலை ஆரம்பித்த நேரத்திலிருந்து சொற்ப நேரமும் இளைப்பாறாது தொடர்ந்து நீந்திச் சென்று, தாய் நாடும் தமிழகமும் ஏன் ஆசியாக் கண்டமே ஆனந்தத்தால் கரைபுரண்டோட உலகமே கேட்டிராத ஒப்பற்ற சாதனையை வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு யாழ்ப்பாணத் தமிழ் மகன் திரு. முருகுப் பிள்ளை நவரத்தினசாமி நிறைவேற்றிக் கோடிக் கரையேறி கொடியேற்றி வைத்தார்.

**வெற்றி ஈட்டிவிட்டான் தமிழன்**
**விருது நாட்டிவிட்டான் உலகு**
**முற்றும் கேட்டிராத புகழின்**
**முடியிலேறி விட்டான் அன்பாய்**
**பெற்ற தாயின் புகழை எங்கும்**
**பேசவைத்து விட்டான் ஈழம்**
**நற்ற வத்தினாலே ஈன்ற**
**நவ ரத்தின சாமி.**

*-பரமஹம்சதாசன்*

இலங்கை நாட்டின் நற்பெயருக்காக வீரச்

சாதனை புரிந்த ஓர் வீரபுருஷர் உண்டானால் அவர் யாழ்ப்பாணத் தமிழ்மகன் திரு. முருகுப் பிள்ளை நவரத்தினசாமியேயாகும். இவர் ஈட்டிய சாதனை, காட்டிய வீரம், நாட்டிய நற்பெயர் ஈழமண்டலத் திலே என்றும் நடந்திராத கேட்டிராத அரிய செயலா கும், இவ்வொப்பற்ற சாதனையால் ஈழநாடு எதிர் பாராத ஒரு தனிச்சிறப்பைப் பெற்றிருக்கிறது. மங்கியிருந்த தமிழன் பெருமை மலர்ந்திருக்கிறது.

நமது தமிழ் மகன் ஆற்றிய இவ்வீரச் செயலை யும் மனக்கண்கொண்டு பார்ப்போமாகில் எவ்வளவு மகத்தானது அதிசயமானது பயங்கரமானது என் பது நன்கு புலனாகும். இவராற்றிய சாதனை எங்கே எப்போ எவருடன் என்பதை நாம் நுணுக்கமாக அலசி ஆராய்தல் வேண்டும். முன் தோன்றிய வீரர் களாற்றிய சாதனையைப் போன்று இவரது சாதனை போர்களத்திலல்ல, பொங்கும் திரையிலே வாள் முனையிலல்ல, ஆழ் கடலிலே மக்களிடையிலல்ல, மச்சத்தின் நடுவிலே செயற்கை எதிர்ப்பிலல்ல, இயற்கை எதிர்ப்பிலேயே இவரது சாதனை நிறை வேறப்பட்டிருக்கிறது.

அன்றியும் கம்பத்திலேறிக் கரணம் அடிக்கும் களக்கூத்தாடி கால் தவறி விழ்ந்தால், கம்பத்தினடியி லும், புறமுதுகு காட்டாது போர் புரியும் வீரன் மடிவானானால் அவனைப் போர்க் களத்திலும் கண்டு அவனின் புகழுடம்பை ராஜோபசார மரி யாதைகளுடன் தகனம் செய்யலாம். அவனின் உயிர் பிரிந்த தலத்தில் உருவச்சின்னம் நாட்டி தலை

வணங்கலாம். மலர்வளையமிட்டு மரியாதை பண்ண லாம். ஆனால் நமது வீரன் ஆழியிலாடியகளக் கூத்தாட்டம் அப்படியன்று. அகன்ற வாயுடைய ஆழியோடும், அயர்ந்துறங்கா அலைகளோடும், அகோரப்பசியுடன் வட்டமிடும் மச்சங்களோடும், விஷப்பாம்புகளோடும், வெட்டும் சுணைகளோடும் தன் சாதனையை நிறைவேற்றி யிருக்கிறார்.

இதனால் நமது வீரன் ஆழியைக்கிழித்தும், அலைகளை எதிர்த்தும், கயிறுபோல் கையிற்சுற்றும் பாம்புகளைப் பிய்த்தெறிந்தும், அச்சமின்றி மச்சங் களை உச்சியிலே மிதித்தும் போராட வேண்டியும் இருந்தது. இவரின் ஆழிப்போரின் மத்தியிலே பத்தடி நீளமுள்ள ஒரு பாம்பு கையிலே சுற்றியது. வாலடித்து வாய்திறந்த ஓர் பாரிய மீன் கிட்ட வந்து வட்டமிட்டது. இவ்விரு கொடிய அபாய எதிரி களை, விஷச்சுணையால் பச்சை குத்தப்பட்ட கரத் தால், கக்கத்தில் நெரிகட்டியிருக்கும் கையால், போராடி இரண்டிரவும் ஒரு பகலும் நீந்தி நீந்திக் கழிக்க வேண்டியதாயிற்று.

இப்போரிலே கையில் சுற்றிய பாம்பு விஷத் தைக் கக்கியிருந்தால், வட்டமிட்ட மச்சம் வாயைத் திறந்திருந்தால், நெரிகட்டிய கைதரி பட்டிருந்தால், நீந்திய கால் ஓய்ந்திருந்தால் நமது வீரனின் நிலை என்னாகும். உள்ள படியே வீரத்திருமேனி ஆழ் கடலின் அடித்தளம் சென்று நித்திய நித்திரை செய்திருக்குமல்லவா? இவ்வித அசம் பாவிதம் இவ்வீரனுக்கு ஏற்பட்டிருந்தால் இவரது மாசற்ற

உயிர் போனாலும், மறுவற்ற உடலைக் கண்டு மன மாற வழியேற்பட்டிருக்குமா? தகனம் செய்தவிடத் தில் மலர் வளையம் வைத்து மரியாதை பண்ணநிலை வந்திருக்குமா? சிலை நட்டு சிரங்குனிய இடம் ஏற் பட்டிருக்குமா? ஒன்றுமேசெய்ய வழி ஏற்பட்டிருக் காதல்லவா? இறந்தாரோ கரையேறினாரோ என் பதே எல்லோர்க்கும் சந்தேகமாயிருக்கும். இதனால் ஒரே நேரத்தில், ஒரே முறையில், ஒரே கணத்தில் உயி ரும் உடலும் ஒருங்கே தியாகம் செய்யக் கூடிய ஒப்பற்ற சாதனையை நமது தமிழ்வீரன் செய்து முடித்திருக்கிறார் என்பதில் என்ன சந்தேகம். இவ் வீரன் உலக வீரர்களிலும் முதன்மை வாய்ந்தவரென் பதில் என்ன குறை. இவ்வீரசிகாமணிக்கு ஈழநாடு சிலைகட்டி வணங்கவேண்டு மென்பதில் என்ன வியப்பு.

## பரித்தியாகங்கள்

பாக்குநீரிணையைக் கடந்து நமது வீரன் கையாண்ட முயற்சிகளும், எடுத்த பிரயத்தனங் களும், கொண்ட பரித்தியாகங்களும் மிக அபார மானதாகும். கடந்த பதினெட்டு வருடகாலமாக இச்சாதனையை நிறை வேற்றுவதற்காகவே தன்னை அர்ப்பணித்திருக்கிறார். இவர் கையாண்ட முறை களைச் சிந்திக்கும் பொழுது உள்ள படியே நெஞ்சம் பக்கிடுகின்றது.

அதிகாலை எழும்பி முட்டைக்காப்பி அருந்தி யதும் சொற்பநேரம் சுவாசாப்பியாசம் செய்து

முடித்து தன் வீட் டிலிருந்து கிளிநொச்சி வரைக்கும் 80 மைல் தூரம் துவிச்சக்கரவண்டியில் (சைக்கிள்) சவாரி செய்தும், ஏராளமான மணற்குவியல் உள்ள இடங்களில் வெறுங்காலால் 10 மைல் தூரம் நடந் தும், கடலில் பலமைல்கள் தூரம் நித்தமும் நீந்தியும் தேகத்திற்கும், விசேஷமாக இருகால் கைகளுக்கும் பலத்தை ஊட்டி வந்திருக்கிறார்.

இஃதல்லாமல் கடல் நீரிலே தன் உடம்பு ஊற வேண்டுமென்றும், பாக்குநீரிணையைக் கடக்கும் சமயம் பகலும் இரவும் கடலிலே காலத்தைக் கழிக்க நேரிடு மாகையால், அங்க அசைவின்றிப் படுத் துறங்கக்கூடிய அனுபவத்தையும் அறிந்து கொள்ள வேண்டுமென்றும் பல மணித்தியாலங்ளாக ஒவ் வொரு நாளும் இதற்கெனப்பழகியும் வந்துள்ளார். ஆரம்பத்திலேயே நீரிலுறங்கக் கூடிய அனுபவம் பெற்றிருந்த படியாலன்றோ இரண்டாம் முறையாக நீந்தியசமயம் இவரின் தீரத்தைப் பரீட்சிப்பதற்கு நித்திராதேவி அணுகியபோது, சபாஷ் உன் கைவரி சையைக் காட்டம்மா வென்று கூறி சொற்பநேரம் நீர்மேல் உறங்கலானார். சாம வேளையில் வந்துள்ள இத்தூக்கத்தைக் கலையாது ஏதோ ஒரு விதத்தில் அயர்ந்தெழுந்து சமாதானப் படுத்தி வழியனுப்பா விடில் நித்திராதேவி தனது தத்துவங்களைக் காட்டிக் கண்ணை மங்கச் செய்திருப்பாள். நம் வீரனுக்கு அச்சமயம் கண் மங்கியிருந்தால் திசை தெரியாது இலக்குத் தெரியாது பல மைல்கள் நீந்திக்கோடிக்கரை காணமுடியாது மனச்சோர்வடையவும் கூடும். இதன்

பின் வெற்றியீட்டுவது கடினம் என்பது சொல்லா மலே விளங்கும்.

இவைகள் யாவும் நன்கறிந்தேகளைப்பின்றி நீந்து வதற்கும் வெகுதூரம் செல்லுவதற்கும், நீர்மேல் உறங்கு வதற்கும், பலவருடகாலமாகப் பரீட்சை செய்துள்ளாரென ஊகிக்கவேண்டியிருக்கிறது.

இன்னும் இவரில் செறிந்திருந்த பிறிதொரு விசேஷ வீரமென்னவெனில், பாக்கு நீரிணையைக் கடக்கும் சமயம் மச்சத்தாலோ, மாருதத்தாலோ, அன்றேல் வேறுகாரணத் தாலோ சீவனோபாயம் நேரிட்டால் தாயிழந்த மூன்று சேய்களும் அந்தரித்து விடுவார்களென்ற அற்ப சொற்ப நினைவின்றி வீரத்தந்தையின் மைந்தரென்று தன் பிள்ளைகள் வீராப்புடன் மார்புதட்டி எச்சபையிலும் அச்ச மின்றிக் கூறினால் போதும்மென்ற எண்ணங் கொண்டு முன்வைத்த காலைப் பின்வாங்காது ஆழி யில் குதித்ததே என்றும் அழியாமுதல் வீரமாகும்.

உடலையும் உயிரையும் மறந்து, பெற்ற பிள்ளைகளையும் துறந்து, உற்ற உறவினரையும் இழந்து வீரம் என்ற ஒரே லட்சியத்திற்காகத் தன் னைப் பரித்தியாகம் செய்த வீரபுருஷன் இவ்விருபா தாம் நூற்றாண்டில் இருப்பானேயாகில் அஃது யாழ்ப்பாணத் தமிழ்மகன் முருகுப்பிள்ளை நவ ரத்தினசாமியேயன்றி மற்றாரில்லை என்பது முற்றி லும் உண்மை.

அச்சமில்லை அச்சமில்லை என்றுபாடி பாரத

மக்களையும், தமிழுலகத்தையும் தட்டி யெழுப்பிய அமரகவி பாரதியார் இந்நாளில் இருப்பாரேயாகில் யாழ்ப்பாணத் தமிழ் மகன் நவரத்தினசாமி ஈட்டிய இவ்வீரச் செய்கையை உச்சிமேல் வைத்து மெச்சிப் புகழ்ந்து இறவாத்தமிழ் மொழியால் எத்தனையோ காவியங்களை எழுதிக்குவித்திருப் பாரென்பதில் யாதொரு சந்தேகமில்லை.

இவ்வீரனைப்போன்று நாமும் ஏன் நீந்தக்கூடா தென்ற எண்ணம் தற்போது ஒவ்வொருவரின் மனதி லும் எழுதல் சகஜம். உள்ளபடியே அவ் வெண்ணம் உதிப்பது மெச்சக்கூடியதே. ஆனால் இவ்வீரனைப் போன்று நாமும் மனோதிடங் கொண்டு சளையாது உழைத்து மேற்கூறிய அப்பியாசங்களைச் செய்து வரல் வேண்டும். அவ்வண்ணம் செய்தால் நாமும் வெற்றியீட்டலாம் என்பது உண்மை. இதனைவிட்டு இவருக்குக் கிடைத்த புகழ்மாலையையும் வரவேற் பையும் கண்டும், பத்திரிகைகளில் வெளிவந்த செய் திகளைப் படித்தும் நமக்கும் அவ்வித நாமம் கிடை க்க வேண்டுமென்ற எண்ணங்கொண்டு பரீட்சை பண்ணாமல், அனுபவ மில்லாமல் ஆழ்கடலில் காலை வைப்போமாகில் அட்டதிக்கும் வெற்றிக்கீதம் பாடுவதற்குப் பதிலாக அன்னை தந்தையர் கிட்ட விருந்து ஒப்பாரிபாடவும் நேரிடும்.

## விசேஷ விவேகங்கள்

நமது வீரன் நவரத்தினசாமி அவர்கள் நீந்து வதில் வீரன்மாத்திரமன்றி, கணிதத்திலும், இயந்திரத்

தொழிலிலும், கிருஷிகச் செய்கையிலும், நாடக நடிப்பிலும், கவிபுனைவதிலுமே ஓர் தலைசிறந்த வீரராகத் திகழுகிறார். இவரது வீரம், விவேகம், பெருமை, புகழ்யாவும் இலை மறைகாய் போலவே மறைந்து வந்திருக்கிறது. இவ்விவேக விற்பன்னரின் சீவிய வாழ்க்கையை சற்று உள்ளாராய்ந்து பார்த்தால் உள்ளபடியே வியப் பைத்தருமென்பது நிச்சயம்.

இவர் கணிதத்தில் ஓர் வல்லுனர். 1950ம் ஆண்டு இவரது கணிதவிவேகம் வானொலிமூலம் அம்பல மாகியது. பல இலக்கங்களைக் கொண்ட பெருக்கல் தொகையை பல இலக்கத்தினால் ஏனை யவர்களைப் போன்று எழுதிப் பெருக்காமல் ஒரே நிமிடத்திலேயே மனதால் பெருக்கி சரியான விடை யைப் பல்லோரும் வியப்புறும் வண்ணம் சொல்லி விடக்கூடிய வல்லமை படைத்தவர். இவ்விவேகத் தைக்கண்ட வானொலிப் பகுதியார் இந்நூதன முறையை வானொலிமூலம் விளம்பரப் படுத்துமாறு கேட்டுக்கொண்டதே இவரது விவேகத்திற்கோர் எடுத்துக்காட்டு.

இஃதன்றி இவர் கிருஷிகப்பகுதியில் ஓர் போதகா ஆசிரியராகக் கடமையாற்றுபவர். எட்டு மணித்தியாலம் மட்டும் கடமையாற்றிச் சம்பளம் பெற்று ஓய்வு பெறுபவரல்ல 'தனது நாளாந்த பணிக ளொழிந்த ஏனைய நேரங்களையெல்லாம், நாட்டின் முன்னேற்றத்திற்காகவும், இலாகாவின் உயர்விற் காகவும், விசேடமாகக் கிருஷிக வளர்ச் சிக்காகவுமே செலவழித்து வந்துள்ளார். இவரது அயரா உழைப்

பால் கிருஷிக இலாகா எவ்வளவோ உயர்வைப் பெற்றிருக்கிறது.

1944ம் ஆண்டு துவக்கம் 1946ம் ஆண்டு வரைக்கும் தபுவா (Tabowa) என்னும் கிருஷிகத் தோட்டத்தில் பணியாற்றும் பொழுது, கிருஷிக பாவனைக்குரிய நவீன இயந்திரங்களமைக்கும் பணியிலீடுபடலானார். இதன் பயனாய், உழுகிற (Ploughiug) இயந்திரம் பசளை (Manure Spreader) யிடுமியந்திரம், விதை(Seed Drill) தூவுமியந்திரம் போன்ற இயந்திரமாதிரிகளை நவீன முறையில மைத்து அரசாங்கத்தாரிடம் சமர்ப்பணம் செய்தார். அவ்வியந்திரங்களில் நவீன அமைப்பும் உபயோக மும் பெருந்தொகையான கிருஷிகம் வளம் பெறும் இந்தியா, பர்மா, சையாம், சீனா முதலாமிடங்களில் தானும் இன்னும் அமைக்கப் பட்டுப்பாவனைக்கு வரவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. 1950ம் ஆண்டு நாற்று நடுமியந்திரமும் செய்து முடித்து அதன் உரிமையை (Patent) அரசாங்கத்தாரிட மிருந்து பெற்றுக்கொண்டார். இன்னும் நாற்றுமாற்று நடுங்கருவி (Paddy Transplanter), அறுவடை செய்யுங் கருவி (Harvester) கதிரடிக்கும் கருவி (Thresher) அளந்து நிரப்புங்கருவி (Measuring and Sacking) தைத்துவிலாச மிடும் கருவி (Stitching and Numbering) முதலான நவீன கருவிகளை அமைப்பதற்கு தற் போது ஈடுபட்டுவருகிறார்.

அனுராதபுரத்தில் இவர் கடமையாற்றும் பொழுது கிருஷிக இலாகாவால் யுத்தநிதிக்காக

காதலர் கண்கள் என்னும் ஓர் நாடகம் மேற்படி இலாகாச் சிப்பந்திகளால் நடிக்கப்பட்டது இந் நாடகத்திலும் பங்குபற்ற பின் வாங்கினவரல்ல. இவ் வாண்மகன், மேடையில் பெண் மகளாகத் தோன்றி, சாகரத்தில் கை நீச்சடித்து வெற்றியீட்டிய வண்ணம், நாடகத்தில் கண்வீச்சடித்துப் பேரெடுத்திருக்கிறார். இவரது சுயகவிதைகள் ஹாட்லிக்கல்லூரி சஞ்சிகையில் அநேகம் இடம் பெற்றிருக் கின்றன.

## மக்களின் குதூகலம்

இவ்வீரசிகாமணி பாக்கு நீரிணைதாண்டி கோடிக் கரையேறி வீரக் கொடி நாட்டிய செய்தி இலங்கை வானொலிமூலம் அறிவிக்கப்பட்டதும், எவ்வண்ணம் நமது வீரமகன் ஆழ்கடல் நீந்தினாரோ அவ்வெண்ணமே இலங்கை இந்தியமக்களும் குறிப்பாக யாழ்ப்பாண மக்களும் ஆழ்கடலன்றி ஆனந்தக்கடலில் நீந்தலானார்கள்.

இவ்வானந்தத்தினால் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் வெடிகள் அதிர்ந்து முழங்கி, கொடிகள் பறந்து துலங்கி, மனைகள் சிறந்து விளங்கி ஏகத்தடல் புடலான அக்களிப்புத் தாண்டவமாடியது.

இலங்கை இந்தியப்பத்திரிகைகள் யாவும் கொட்டை எழுத்துக்களால் தலையங்கமிட்டு இவ் வீரசிகா மணியின் வீரப்பிரதாபத்தை அகில உலகமும் விளங்க வைத்தன. எழுத்தாளர்கள் தம் இதயமெழுந்த எழுர்ச்சிகளை சொற்சித்திரத்தால் சித்திரித்

தனர். பாவலர்கள் பாலும் தெளி தேனும் பாகும் கலந்த பைம்மொழியால் பாவிசைத்தனர். இந்தியப் பிரதமர் பண்டித நேரு, இலங்கைப்பிரதமர் சேர். ஜோண் கொத்தலாவலை முதலாம் பிரதமர்களிட மிருந்து வாழ்த்தோலைகள் வந்து சேர்ந்தன.

போர்க்களம் சென்று புறமுதுகு காட்டாது போர் புரிந்து வாகைமாலைசூடி வெற்றித்துவசம் ஏந்தி தன் தாய்நாட்டின் தலைநகரம் வருந் தளப தியை, அரசபிரதானிகளும் பிரஜைகளும் எவ் வண்ணம் குதூகலத்துடன் வரவேற்க முன் வாசலில் முரசுகொட்டி நிற்பார்களோ, அவ் வண்ணமே பாக்கு நீரிணைப் போரில் வெற்றி கொண்டு ஜெயபேரிகை கொட்டி வீடு திரும்பும் தளபதி நவரத்தினத்தையும் பரிவாரத்தையும் வரவேற்கத் தாயகத்தன்பர் தலை வாசலான துறைமுகம் நாடிநின்றனர். கடலெழுந்த திரை போன்று யாழ்ப்பாண மக்கள் ஆனந்தத்தால் கரை புரண்டு வரவேற்பில் கலக்க வல்வெட்டித் துறையெழுந்தனர். நமது வீரன் தமது வீரக்கழலூன்றி வரும் வீதிகளெங்கும் துவஜ தோரணங்களாலும் பூரணகும்பங்களாலும் நன்கு அலங்கரித்தனர். குலவாழையோடு இள வாழை நட்டும் குருத்தாலே பந்தல் பொருத்தியேயிட்டும் கோலாகலம் செய்த னர். இவ்வானந்தத்தை எத்தகைய சிறப்புக் கொண்டு பிரத்தியட்சமாய் காட்டமுடியுமோ அத்தகைய சிறப்போடு மக்கள் காட்ட எத்தனித்தனர்.

# வரவேற்பு வைபவம்

நம்வீரருக்கு வரவேற்பளிக்கும் முதலாவது பாக்கியம் இந்தியாவுக்கே கிடைத்தது. இவ்வர வேற்பில் பங்கு பற்றியபின்பே வாகை சூட்டிய நவ ரத்தினசாமியும் கோஷ்டி யாரும் தம் தாயக மண் ணில் பாதமூன்றலானார்கள். இவ்வீரரை வரவேற்க வல்வெட்டித் துறைமுகத்தில் இருபத் தையாயிரத் திற்கு மேற்பட்ட மக்கள் குழுமியிருந்தனர். இவரை ஏற்றிவந்த மோட்டார் படகு துறைமுகத்தை அண்டிய தும் கரையோரத்தில் காத்திருந்த மக்களின் அரஹரா கோஷம் வானைப்பிழந்த பலபிரமுகர்களால் மலர் மாலை அணிவித்து வரவேற்கப் பட்டு, பருத்தித் துறைப் பிரதிநிதி, சாவகச்சேரிப் பிரதிநிதி, தற்காலிக இந்திய ஹைக்கமிஷினர், திரு. சி. எஸ்.பார்குமார குலசிங்கம் திரு.வி.நல்லையா டாக்டர். என். எம். பெரெரா முதலாம் பிரமகர்களால் பாராட்டுகள் கூறப் பட்டு வரவேற்புவைபவம் மிகவிமரிசையாக நடை பெறலானது.

இன்னும் இவ்வீரரை கௌரவிக்கும் முகமாக வடமாகாண மக்களாலும் இலங்கைப் பொது மக்க ளாலலும் இரு உற்சாகமான பொதுவர வேற்புகள் அளிக்கப்பட்டன. முறையே ‘யாழ்ப்பாண நகரமே யரால் தங்கப் பதக்கமும் சங்கிலியும், பிரதமர் கொத்தலாவலையால் ஓர் வெள்ளிக் கேடயமும் பரிசளிக்கப்பட்டது. இவ்விருபொது வரவேற்பு களைத்தவிர பலசங்கங்களாலும், ஸ்தாபனங்களா

லும், கல்லூரிகளாலும் எவ்வித சாதிசமய இனவேறு பாடின்றி நமது வீரனுக்கு உற்சாகமான வரவேற்பும் பரிசளிப்புகளும் நடைபெற்றே வருகின்றன. ஈற்றில் நமது வீரனை இலங்கை அரசாங்கம் மாட்சிமை தங்கிய ராணியாருக்கும் கோமகனு க்கும் அறிமுகம் செய்து பெருமைப்படுத்தியது இங்கு குறிப்பிடத் தக்கது. திருமுகதரிசனம் தமிழ் வீரனுக்குக் கிடைத் தது உள்ளபடியே தமிழ்மக்களுக்கு ஓர் பெரும் பாக்கியமும் கௌரவமுமாகும்.





நீச்சல் வீரன்
நவரெத்தினசாமி,
வல்வெட்டித்துறை.
கரை இறங்கிய இடம்: கோடிக்கரை.
உபசரிப்பு: சிவ. ரெத்தினம்பிள்ளை அவர்கள்



தினகரன்

ஞாயிறு வெளியீடு

தமிழ் வீரன் நவரத்தினசாமி நீந்திக்கடந்தார்



வல்வை ரேகு துறைமுகம்

HIGH COMMISSION FOR INDIA IN CEYLON
COLOMBO 1.

No.HC-28/54.    6th April 1954.

Dear Mr. Navaratnaswamy,

Please accept my heartiest congratulations on your feat in swimming the Palk Strait which has never been achieved before. The feat required uncommon powers of endurance, courage and faith and it was fortunate and really remarkable that you could do it only in the second attempt. This feat will rank as one of the major ones of human endeavour, at any rate, in this part of the world. It shows that Asia is marching forward, coming so soon as it does after the recent conquest of the Everest by Tensing.

Wishing you once again all good luck,

Yours sincerely,
(C.C. Desai)

M. Navaratnaswamy, Esq.,

KS/

EIIR

BUCKINGHAM PALACE

*By Command of*
*HER MAJESTY THE QUEEN*
*the accompanying Medal is forwarded t*

MURUGUPILLAI NAVARATNASAMY ESQUTRE
B.E.M

*to be worn in commemoration of*
*Her Majesty's Coronation*
*2nd June, 1954*

Governor General's Office.

Queen's House
Colombo
Ceylon

Reference;
No. R. 178/54

3rd December 1954.

Sir,

With reference to the award to you on 10th June 1954 of the British Empire Medal (Civil Division), I am directed by the Governor-General to inform you that His Excellency proposes to present the Medal to you at an Investiture to be held at Queen's House, Colombo, on Saturday 15th January 1955 at 10.30 a.m.

2. It is desired that you arrive at Queen's House not later than 10.00 a.m. You may bring with you two guests to witness the ceremony. They should arrive at Queen's House not later than 10.00 a.m.

3. National Dress, Uniform (Military or Civil), morning dress, or lounge suit [illegible] by [illegible] who attend the ceremony, while decorations may be worn by those entitled to do so.

4. Kindly let me know as soon as possible whether you will present yourself at the Investiture. Tickets of admission and motor car labels for yourself and your guests will be forwarded to you in due course.

I am, Sir,
Your obedient Servant,

Secretary to the Governor-General.

M. Navaratnasamy, Esquire, B.E.M.



வெளியீடு:
வல்வை வரலாற்று
ஆவணக்காப்பகம்
கனடா
WWW.vvthistory.com